*செய்தி வெளியீடு எண் :10* *நாள் :14.01.2020*

**தேனி மாவட்டம்**
**ஆண்டிபட்டி மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில்**
**காலியாகவுள்ள உதவியாளர் மற்றும் பயிற்றுநர்கள் பணியிடங்கள்**
**தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:-**

*****

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பொது மற்றும் தனியார் கட்டமைப்பு திட்டத்தின் கீழ் காலியாகவுள்ள 1 தற்காலிகாக உதவியாளர் மற்றும் 1 தகவல் தொழில் நுட்பம் மற்றும் சாதனங்கள் பராமரிப்பு பயிற்றுநர், 2 டெக்ஸ்டைல் இயந்திர மின்னணுயியல் பயிற்றுநர் ஆகிய பணியிடங்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்படவுள்ளது.

இப்பணியிடங்களுக்கு பொதுப்பிரிவு முன்னுரிமை அற்றவர்கள் குறைந்த பட்சம் 18 வயது முதல் அதிகபட்சம் 35 வயதிற்குள் (பொதுப்போட்டி 30 வயது, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 32 வயது, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் அருந்ததியர்கள் 35) இருத்தல் வேண்டும். பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கு வயது வரம்பு கிடையாது.

உதவியாளர் பணியிடத்திற்கு பட்டப்படிப்பு மற்றும் கணினியில் அறிவுத்திறனுடன் 6 மாதம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். தகவல் தொழில் நுட்பம் மற்றும் சாதனங்கள் பராமரிப்பு பயிற்றுநர் பணியிடத்திற்கு தகவல் தொழில் நுட்பம் மற்றும் சாதனங்கள் பராமரிப்பு தொழிற்பிரிவில் (NTC/NAC) தேர்ச்சி பெற்று அதே துறையில் மூன்று வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

டெக்ஸ்டைல் இயந்திர மின்னணுயியல் பயிற்றுநர் பணியிடத்திற்கு டெக்ஸ்டைல் இயந்திர மின்னணுயியல் பணியிடத்திற்கு (NTC/NAC) அதே துறையில் மூன்று வருட அனுபவம் மற்றும் டெக்ஸ்டைல் இயந்திர மின்னணுயியல் பட்டயப்படிப்பில் தேர்ச்சி மற்றும் அதே துறையில் இரண்டு வருட அனுபவம் அல்லது டெக்ஸ்டைல் இயந்திர மின்னணுயியல் பட்டப்படிப்பு BE / ME அதே துறையில் ஒரு வருட முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

எனவே, இப்பணியிடங்களுக்கு தகுதியுடையவர்கள் மட்டும் தங்களது பெயர், கல்வித்தகுதி, பாலினம், சாதி விபரம், முன் அனுபவ விபரம், வீட்டு முகவரி, வேலைவாய்ப்பு பதிவு எண் இருப்பின் அதன் விபரம், கைபேசி எண் ஆகிய விபரங்களை விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்கள் நகல்கள் மற்றும் புகைப்படத்துடன் விண்ணப்பித்திட வேண்டும். விண்ணப்பங்கள் தேர்வு குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு தகுதி உடையவர்கள் நேர்முக தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

விண்ணப்பதினை பயிற்சி அலுவலர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்), எஸ்.ரெங்கநாதபுரம், ஆண்டிபட்டி, தேனி மாவட்டம் - 625 512 என்ற முகவரிக்கு 23.01.2020 மாலை 5.00 மணிக்குள் அனுப்பி வைத்திட வேண்டும் என அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***